பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | புரட்டாதி 27 | செவ்வாய்க்கிழமை | 14.10.2025 | அதிர்வு 075


## நிதி கிடைத்தும் புதைகுழி அகழ்வு மழையால் தாமதம்

(எஸ்.நிதர்ஷன்)



யாழ். செம்மணி – சித்துப்பாத்தி மனிதப் 06

# ஆளுநர்கள் மாற்றமும் எந்நேரமும் நடக்கலாம்

## அமைச்சரவை மாற்றத்தை அடுத்து அதுதான்

தன்னுடைய பதவிக் காலத்தில் முதல் ஆண்டைப்பூர்த்திசெய்துள்ளகட்டத்தில்முதல் தடவையாகக் கடந்த வெள்ளிக்கிழமையன்று அமைச்சரவை மாற்றத்தை மேற்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அடுத்து எந்நேரமும் தமது மாகாண ஆளுநர்களின் மாற்றங்களைச் செய்யக்கூடும் எனக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒவ்வொரு மாகாணத்தினதும் ஆளுநர்களின் செயற்பாடுகள், பெறுபேறுகள், நடவடிக்கை முன்னேற்றங்கள் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் மதிப்பீடுகளைத் தயாரித்து வருகின்றது என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. 06



# செம்மணியில் கோர விபத்து! பிரபல விளையாட்டு வீரர் பலி!!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற கோர விபத்தில் பிரபல விளையாட்டு வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளும் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோ ஒன்றும் சிக்கி வீதியை விட்டு விலகி வயலுக்குள் பாய்ந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த யாழ். வடமராட்சி கிழக்கு, உடுத்துறையைப் பகுதியைச் சேர்ந்த செந்தமிழ் விளையாட்டுக் கழக வீரரும் சிறந்த உதைப்பந்தாட்ட நடுவருமான யூட் (வயது –27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(மேலதிக படங்கள் 2ஆம் பக்கத்தில்...)




யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், சர்வதேச ரீதியில் தனக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அழுத்தங்களைச் சமாளிப்பதற்காக கொழும்பு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

காணாமல் போனோருக்கான அலுவலகம், இழப்பீடுகளை வழங்கும் அலுவலகம் என்று அது தொடர்பாக பல சட்டங்களைக் கொண்டு வந்து, அவற்றின் அடிப்படையில் கட்டமைப்புக்களை கொழும்பு ஆட்சிப் பீடங்கள் அவ்வப்போது கண்துடைப்பு நடவடிக்கைகளாக அமைத்தாலும், அவற்றை யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பு ஏற்றுக்கொள்வதாக இல்லை.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு வரை நேரடியாகச் சென்று, சர்வதேச நியமங்களுக்கு அமைவான பன்னாட்டு விசாரணை முறைமைகளையும், நடவடிக்கைகளையும் மட்டுமே ஏற்றுக் கொள்வோம் என்று தமிழர் தரப்பு விடாப்பிடியாக கூறி வருகின்றது.

இலங்கைத் தமிழரசு கட்சியின் 06

# செம்மணியில் கோர விபத்து! பிரபல விளையாட்டு வீரர் பலி!!













# சங்குப்பிட்டியில் சடலமாக மீட்கப்பட்ட பெண் உயிருடன் எரிக்கப்பட்டு கடலில் வீசப்பட்டார்

## காரைநகர் பகுதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தாய் என அடையாளம்; அவர் அணிந்திருந்த 10 பவுண் நகைகள் மாயம்

(எஸ்.நிதர்ஷன்)

பூநகரி, சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் கரையொதுங்கிய பெண்ணின் தலையில் பலமாகத் தாக்கியமைக்கான சான்றுகளும் , முகத்தில் எரியக் கூடிய திரவத்தை ஊற்றி எரியூட்டிமைக்கான சான்றுகளும் காணப்படுகின்றன என்று சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பெண்ணொருவரின் சடலம் கரையொதுங்கி இருந்த நிலையில், அந்தப் பெண் காரைநகர் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான சுரேஷ்குமார் குலதீபா என அடையாளம் காணப்பட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சடலம் நேற்று திங்கட்கிழமை உடற்கூராய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அதன்போது அந்தப் பெண்ணின் தலையில் பலமாகத் தாக்கப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படுவதுடன், முகம் உள்ளிட்ட பகுதிகளில் எரியக் கூடிய திரவம் ஊற்றி எரியூட்டப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.

அவரது நுரையீரலுக்குள் நீர் புகுந்தமையால் ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாகவே மரணம் சம்பவித்துள்ளது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையின் பிரகாரம் பெண்ணின் முகத்தில் எரியூட்டிய பின்னரே அவரை நீரினுள் வீசி இருக்க வேண்டும் என்பது ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதேவேளை, மேற்படி பெண் தனது கணவருக்கு வவுனியாவில் உள்ள நண்பி ஒருவரின் பிறந்தநாள் கொண்டாட்டம் ஒன்றுக்குச் செல்வதாகக் கூறி சென்றார் எனவும், வீட்டை விட்டு அவர் செல்லும்போது சுமார் 10 பவுண் நகைகளை அணிந்திருந்தார் எனவும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பெண் சடலமாக மீட்கப்பட்ட வேளை அவரது சடலத்தில் நகைகள் எவையும் காணப்படவில்லை.

இந்தக் கொலைச் சம்பவம் நகைக்காக மாத்திரம் நடைபெற்றதா? அல்லது வேறு பின்னணிகள் உள்ளனவா? என்று பூநகரி பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, மேற்படி பெண் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டாரா என்பது தொடர்பில் தெளிவாகக் கூற முடியாதுள்ளது எனவும், சடலம் நீண்ட நேரம் நீரில் மிதந்தமையால் அவற்றை உறுதியாகக் கண்டறிய முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பளையில் ரயிலுடன் ஓட்டோ மோதிய விபத்தில் சாரதி பரிதாப உயிரிழப்பு!



பளை – இத்தாவில் பகுதியில் நேற்று ரயிலுடன் ஓட்டோ மோதி விபத்துக்குள்ளானதில் ஓட்டோ சாரதி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த ரயிலுடன் இத்தாவில் பகுதியில் ஓட்டோவைச் செலுத்தி வந்த 69 வயதான வயோதிபர் ரயிலுடன் மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மொரகஹகந்த நீர்த்தேக்கத்தில் மேலும் பல தோட்டாக்கள் மீட்பு

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தை அண்மித்து முன்னெடுக்கப்பட்ட தேடுதலில் போது விமானங்களை அழிக்கின்ற 2 ஆயுத ரவைகள் உள்ளிட்ட 1,163 தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது இந்த தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன.

ரி -56 ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 895 தோட்டாக்கள், 71 மில்லிமீட்டர் ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 116 தோட்டாக்கள், 41 மில்லி மீற்றர் ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 10 தோட்டாக்கள், 78 மில்லி மீற்றர் ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 2 தோட்டாக்கள், 84.5 மில்லி மீற்றர் ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 4 தோட்டாக்கள் மற்றும் 134 ஜி.எம்.பி.ஜி தோட்டாக்கள் மீட்கப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி தோட்டக்களை எவரேனும் அந்த இடத்தில் மறைத்து வைத்தார்களா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றனர் என பொலிஸார் தெரிவித்தனர்.



# 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்



தற்போது நிலவும் பலத்த மழை காரணமாக கண்டி மற்றும் கேகாலை மாவட்டங்களுக்கு இரண்டாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

அத்துடன், பதுளை, மாத்தளை, மொனராகலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு முதலாம் நிலை 1) முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

# வாகன வரி குறைப்பு தொடர்பில் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பு



மோட்டார் வாகனங்களுக்கு விதிக்கப்படும் வரியைக் குறைக்குமாறு வாகன இறக்குமதியாளர்கள் குழுவொன்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, 2026 ஆம் ஆண்டுக்கான பாதீட்டுக்கான முன்மொழிவாக வாகன இறக்குமதியாளர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

சாதாரண பொதுமகன் ஒருவரும் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்யும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளும் வகையில், வரிகளைக் குறைக்குமாறு வாகன இறக்குமதியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில், கடந்த ஜனவரி 28 ஆம் திகதி அரசாங்கம் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கிய பின்னர், ஆகஸ்ட் மாதம் வரை 918 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன், ஒகஸ்ட் மாதத்தில் 249 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள வாகனங்கள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

# காங்கசன்துறைக்குப் பயணிகள கப்பலில் 2 ஆயிரம் சிகரெட்டுகளுடன் வந்த பெண்!

**(ந.லோகதயாளன்)**

நாகபட்டினத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு வருகை தந்த கப்பலில் பயணித்த ஓர் பெண் 2 ஆயிரம் சிகரெட் வகைகளை எடுத்து வந்து வகையாக மாட்டிக்கொண்டார்.

நாகபட்ட்ஜனத்தில் இருந்து நேற்று முன்தினம் காங்கேசன்துறைக்கு வருகை தந்த பயணிகள் கப்பலில் பயணித்த ஓர் இந்தியப் பெண் 2 ஆயிரம் சிகரெட் வகைகளை தனது உடைமையில் எடுத்து வந்து வந்தமை சோதனையின்போது கண்டு பிடிக்கப்பட்டது.

சிகரெட் வகைகளை கைப்பற்றிய சுங்கத் திணைக்களத்தினர் விசாரணைகளின் பின்னர் பயணியை தொடர்ந்து பயணிக்க அனுமதித்தபோதும் பொருள் அரச உடமையாக்கப்பட்டது.

# மின் கட்டணத் திருத்தம் குறித்து இன்று அறிவிப்பு வெளியாகும்

இந்த வருடத்தின் மூன்றாவது மின் சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான இறுதித் தீர்மானம் இன்று காலை அறிவிக்கப்படும் என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையானது, ஒக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான நான்காவது காலாண்டிற்காக 6.8 சதவீத மின் கட்டண அதிகரிப்பை முன்மொழிந் திருந்தது.

இந்த கட்டணத் திருத்த முன்மொழிவு குறித்து நாடு முழுவதும் உள்ள அனைத்து மாகாணங்களிலும் பொதுமக்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைப் பெறும் செயல்முறையை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மேற்கொண்டது.

இந்த அமர்வுகளில் சுமார் 500 பேர் நேரடியாகவும் எழுத்து மூலமாகவும் தமது யோசனைகளையும் பரிந்துரைகளையும் சமர்ப்பித்துள்ளனர்.

பொதுமக்களின் கருத்துகள் மற்றும் மின்சார சபையின் முன்மொழிவுகளை முழுமையாக ஆராய்ந்த பின்னர், நுகர்வோர் மற்றும் நாட்டின் பொருளாதார சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு மின் கட்டணங்கள் என்னவாக இருக்கும் என்பது குறித்த இறுதி முடிவு இன்று காலை ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படவுள்ளது.

# வெளிநாடுகளின் இராணுவ அதிகாரிகள் குழு நேற்று யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு விஜயம்

(ந.லோகதயாளன்)

வெளிநாடுகள் பலவற்றின் இராணுவ அதிகாரிகள் பலர் இலங்கை இராணு வத்தினரின் ஒத்துழைப்புடன் யாழ்ப் பாணத்திற்கு வருகை தந்துள்ள னர்.

நேற்று மாலை இலங்கை இராணுவத் தினரின் ஒழுங்கில் யாழ்ப்பாணத்திற்கு வெளிநாடுகள் பலவற்றின் இராணுவ அதிகாரிகள் சுமார் 30 பேர் வரை வருகை தந்துள்ளமையோடு இன்று குடா நாட்டின் பல இடங்களுக்கும் அவர்கள் பயணிக்கின்றனர்.

குடாநாட்டின் கரையோரக் கிராமங்க ளிற்கு இன்று பயணிக்கும் அவர்கள் நாளைய தினம் நெடுந்தீவிற்கு பயணிக் கவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படு கின்றது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றக் குழு தலைவர் சிறி தரன் வரை எல்லோரும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இதனைத்தான் வலியுறுத்தி வருகின்றனர்.

யுத்த காலத்திலும் பின்னரும் இடம் பெற்ற – வலிந்து காணாமலாக்கப்பட்ட – நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட உறவுகளும் மேற்படி காணாமல் போனோ ருக்கான அலுவலகம், இழப்பீடுகளை வழங்கும் அலுவலகம் ஆகியவற்றை அடியோடு நிராகரித்துப் புறக்கணித் திருக்கின்றனர்.

ஆனால் அத்தகைய அலுவலகம் ஒன்று தொடர்பில் அரசமைப்பின் கீழ் இயங்கும் அரசமைப்பு கவுன்ஸிலின் ஒரே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான சிறிதரனின் நடவடிக்கை தொடர்பில் சில சர்ச்சைக் குறிப்புகள் இப்போது வெளியாகி உள்ளன.

இழப்பீட்டுக்கான அலுவலக உறுப்பி னர் இருவரைத் தேர்வு செய்வதற்கான விடயம் அரசமைப்பு கவுன்ஸிலுக்கு வந்த போது அதற்காக விண்ணப்பித்தோரின் பட்டியலில் 12 பேரின் பெயர்கள் இறுதி செய்யப்பட்டன. அவர்களை நேர் முகம் கண்டு, தகுதியான இருவரைத் தெரிவு செய்வதற்காக அரசமைப்பு கவுன்ஸில் தனது உறுப்பினர்களிடையே அறுவர் கொண்ட குழுவைத் தெரிவு செய்தது.

அரசமைப்பு கவுன்ஸிலில் இடம் பெற்றிருக்கும் சிவில் சமூகப் பிரதிநிதிக ளான கலாநிதி பிரதாப் இராமானுஜம், கலாநிதி தில்குஷி அனுலா விஜேசுந் தர, கலாநிதி டினேஷா சமரரத்ன ஆகி யோரோடு நாடாளுமன்ற உறுப்பினர்க ளான அபூபக்கர் ஆதம்பாவா, அஜித் பி பெரேரா, சிவஞானம் சிறிதரன் ஆகிய அறுவரே அந்தக் குழுவில் இடம் பெற்றி ருந்தனர்.

அந்தப் பன்னிருவரிலிருந்து கடைசி யாக நேரமுகக் குழு இருவரைத் தெரிவு செய்து அனுப்பி இருந்தது. அந்த இரு வரையும் சிறிதரன் எம்.பியையும் உள் ளடக்கிய அரசமைப்பு கவுன்ஸில் எந்த எதிர்ப்புமின்றி அங்கீகரித்து உள்ளது.

அந்த இருவர் பற்றிய விவரம் வெளி யான போதுதான் தமிழர் தரப்பில் அதிர்ச்சி நிலைமை வெளியிடப்பட்டிருக்கின் றது.

தெரிவு செய்யப்பட்டவர்களில் ஒருவர் தமிழர் என்றாலும், அவர் இலங்கைக் கடற்படையின் முன்னாள் மூத்த அதி காரி ரியல் அட்மிரல் ஜே.ரி.ஜி.சுந்தரம். 1971 முதல் 2001 வரை கடற்படையில் பணியாற்றியவர். 'வீரய்யா' என்ற கடற் படை கப்பலுக்கு தளபதியாக இருந்தவர். கிழக்கு மாகாண கடற்படைத் தளபதியாக வும் செயற்பட்டவர். முப்பது ஆண்டு காலக் கடற்படைப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் கொத்தலவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் துறைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

இழப்பீட்டு அலுவலகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மற்ற உறுப்பினர் ஒரு பெண் மணி. திருமதி வசந்தா பெரேரா. இவர் கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச் சின் செயலாளராகக் கோலோச்சிய போது காணி அமைச்சின் மேலதிக செயலாள ராகவும், அதற்கு மேலதிகமாக பாதுகாப்பு அமைச்சின் உதவிச் செயலாளராகவும் பணியாற்றியவர். அச்சமயத்தில் பாது காப்புத் தரப்பினரால் சுவீகரிக்கப்பட்ட அல்லது ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர்களின் காணிகள் தொடர்பான விடயங்களை பாதுகாப்புச் செயலாளரின் சார்பில் பெரும்பாலும் கையாண்டவர் இவர் தான். யுத்தத்தின் முடிவில் ஆக்கிரமிக் கப்பட்ட தமிழர்களின் காணிகளை விடுவிப்பதற்காக இரா.சம்பந்தன் எம். பி. தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பிரதிநிதிகள் பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ வோடு நேரடியாக ஊடாடிய சமயங்களில், அந்த விவகாரங்களை ஒட்டி, நேரடியாக இந்தப் பெண்மணியோடுதான் தமிழ்ப் பிரதிநிதிகள் மோத வேண்டி இருந்தது. பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை விட தமிழர்களின் காணி களை விட்டுக் கொடுக்க முடியாது என்ற தீவிரமான நிலைப்பாட்டில் இவரே இருந் தார் என்று தமிழ் நாடாளுமன்ற பிரதி நிதிகளே அந்தச் சமயத்தில் அதிகம் அதிருப்தியும் எரிச்சலும் வெளிப்படுத் திக் கொண்டிருந்தார்கள்.

இத்தகைய இருவரைத்தான் அரச மைப்பு கவுன்ஸில், தமிழர் தரப்பினால் நிராகரிக்கப்பட்ட இழப்பீட்டு அலுவலகத் துக்கான உறுப்பினர்களாகத் தெரிவு செய்திருக்கிறது.

அந்தத் தெரிவுக்கான நேர்முகத் தேர்வுக் குழுவில் தமிழ் அரசுக் கட்சி யின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன் இடம்பெற்றிருக்கிறார். அது மாத்திரமல்ல. அதற்குப் பின்னர் அந்த இருவரையும் அந்தப் பதவிக்கு நியமிக் கும் அரசமைப்பு கவுன்ஸிலின் கூட்டத்தி லும் இருந்து, அந்த நியமனம் அங்கு அங்கீகரிக்கப்பட இடமளித்திருக்கின்றார். அந்த நியமனங்களை ஆட்சேபிப்பதா கவோ, எதிர்ப்பதாகவோ, தன்னுடைய அதிருப்தியை தெரிவிப்பதாகாவோ சிறிதரன் எம்.பி. பதிவு செய்யவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 60 ஆவது அமர்வின் பக்க நிகழ்வில் கலந்து கொண்டு, சர்வதேச பங்களிப் பில்லாத இலங்கையின் நடவடிக்கை களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று உரையாற்றி விட்டு வந்துதான், மேற்படி நியமனங்கள் மற்றும் அதை உறுதிப் படுத்தும் அரசமைப்புக் கவுன்ஸிலின் கூட்டத்தில் தான் பங்கு பற்றியமை பற்றிய கூட்ட அறிக்கையை சிறிதரனும் சேர்ந்து அங்கீகரித்து இருக்கிறார் என அறிய வந்தது.

இத்தகைய நியமனங்கள் குறித்து குறைந்தபட்சம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சக நாடாளுமன்ற உறுப்பினர் களாவது தங்களின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கேள்வி எழுப்புவது அவர்களது கடமையாகும்.

இதே சமயம் அரசமைப்பு கவுன்ஸி லுக்கு ஆளும் தரப்பு மற்றும் பிரதான எதிர்க்கட்சி ஆகியவற்றைச் சாராத 24 எம்.பிக்களின் சார்பாகவே சிறிதரன் பிரதிநிதித்துவப்படுத்துகிறார் என்பது தெரிந்ததே.

இந்த 24 எம்.பிக்களில் தமிழரசுக் கட்சி யின் எட்டு எம்.பிக்கள் மற்றும் கஜேந்திர குமார் பொன்னம்பலம், செல்வம் அடைக் கலநாதன் ஆகிய பத்து தமிழ் எம்.பிக் களைத் தவிர்ந்த மற்றைய 14 பேரும் தங்கள் சார்பில் அரசமைப்பு கவுன்ஸி லைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறி தரன், அங்கு பெரும்பாலும் ஆளும் தரப்பின் நிலைப்பாட்டையே ஆதரித்துச் செயற்படுகின்றார் என்ற அடிப்படையில் தங்கள் ஆட்சேபத்தை வெளிப்படுத்தும் வழிவகை பற்றி ஆராய்ந்து வருகிறார்கள் என்று அறிய வந்தது.

## நிதி கிடைத்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதைகுழி அகழ்வுப் பணிகளுக்கு அமைச் சால் நிதி வழங்கப்பட்டும் தொடர்ச்சியான மழையால் அகழ்வு தாமதிக்கப்பட்டுள்ளது.

செம்மணி – சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள் ளப்பட்டது. வழக்கின் பின்னர் நீதிவான் உள்ளிட்ட குழுவினர் செம்மணி – சித்துப் பாத்தி மனிதப் புதைகுழிப் பகுதியைப் பார் வையிட்டனர்.

இதன்போது, அந்த இடம் ஒரு களி மண் தரையாகக் காணப்பட்டது. தொடர்ச் சியாக மழை பெய்யுமாக இருந்தால் அந்த இடத்தில் அகழ்வுப் பணிகள் மேற் கொள்வது மிகவும் சிரமமானது எனத் தெரிவிக்கப்பட்டது. ஆகவே, இந்த வழக்கு மீண்டும் திறந்த நீதிமன்றத்தில் எதிர் வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படும் எனத் தீர்மா னிக்கப்பட்டது.

இதேவேளை, சட்ட வைத்திய அதி காரி பிரணவன் செல்லையாவால் புதை குழி அகழ்வுக்குக் கோரப்பட்ட நிதி, நீதி மைச்சால் அனுமதிக்கப்பட்டு அதற் கான தொகை அனுப்பி வைக்கப்பட்டுள் ளது.

## ஆளுநர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவற்றின் அடிப்படையில் ஜனாதி பதியின் முடிவுகள் அமையும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

தமிழர்களின் ஈடுபாடு உள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வடக்கு மாகா ணத்தைப் பொறுத்தவரை ஜனாதிபதி செயலகம் ஓரளவு திருப்தி கொண்டிருப்ப தாக அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன.

பெரிய சர்ச்சைகளை ஏற்படுத்தாமல், நிர்வாகநடவடிக்கைகளைவடக்குமாகாண ஆளுநர் அலுவலகம் முன்னெடுத்துச் செல்வதாக ஜனாதிபதி செயலக வட்டா ரங்கள் கருத்து வெளியிட்டன.





## தனியார் பஸ் நிறுத்த விவகாரம்

# பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தினருடன் நகரபிதா டக்ளஸ் போல் கலந்துரையாடல்

(இரா.மயூதரன்)

பருத்தித்துறை நகர் பகுதியில் தனியார் பஸ் தரிப்பிடம் தொடர்பில் நீண்ட காலமாக இருந்துவரும் பிரச்சினைக்கு தீர்வுகானும் வகையில் பருத்தித்துறை நகரபிதா நேரில் விஜயம் செய்து ஆராய்ந்துள்ளார்.

பருத்தித்துறை நவீன சந்தை கட்டடத் தொகுதியின் தெற்கு பக்கமாக தனியா பஸ்கள் நிறுத்தப்பட்டு சேவையில் ஈடுபட்டு வருகின்றன. இதன் காரணமாக நவீன சந்தை கட்டடத் தொகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மூடி மறைக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்படும் நிலை காணப்பட்டு வருகிறது.

பருத்தித்துறை நவீன சந்தை கட்டடத் தொகுதி திறக்கப்பட்ட காலம் முதல் நீண்ட காலமாக நீடித்துவரும் இப்பிரச்சினை தொடர்பில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் முறையிட்டும் எதுவித தீர்வும் காணப்படாதுள்ளது.

இந்நிலையில், இந்த விடயம் தொடர்பில் பருத்தித்துறை வர்த்தகர் சங்க நிர்வாகத்தினால் நகரபிதா வின்சன் டி போல் டக்ளஸ் போலிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்து நேற்று திங்கள் கிழமை காலை 10.30 மணியளவில் மேற்படி இடத்திற்கு நேரில் விஜயம் செய்து வர்த்தகர் சங்க நிர்வாகிகளுடன் பார்வையிட்டு கலந்துரையாடியிருந்தார்.

இது தொடர்பில் இன்று தனியார் பஸ் சங்கத்தினரையும் அழைத்து கலந்துரையாட நகரபிதாவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது பருத்தித்துறை வர்த்தகர் சங்க செயலாளர், பொருளார் ஆகியோர் இந்த விடயம் தொடர்பில் நகரபிதாவிற்கு தெரியப்படுத்தியிருந்தனர்.









# பருத்தித்துறை நகரசபை செயலாளர் தலையீட்டில் கடல் மண் அகற்றும் செயற்பாடு இடைநிறுத்தம்

(இரா.மயூதரன்)

பருத்தித்துறை கொட்டடி கடற்கரையில் குவிக்கப்பட்டுள்ள மணலினை அகற்றும் செயற்பாடு பருத்தித்துறை நகரசபை செயலாளரின் தலையீட்டில் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

வான் அகழ்வுப் பணியின் போது எடுக்கப்பட்ட மணலை அகற்றி அப்பகுதி சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக அந்த பகுதியில் அடையாளம் காட்டப்பட்ட இடத்தில் கொட்டி நிரப்பும் பணி கடந்த சனிக்கிழமை பகல் 11 மணியளவில் நகரசபை தவிசாளர் வி. டக்ளஸ் போல் மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நகரசபை உழவு இயந்திரங்கள் மூலம் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் திடீரென மணல் அகற்றும் செயற்பாட்டினை நிறுத்தி விட்டு நகரசபை ஊழியர்கள் சென்று விட்டனர்.

இது தொடர்பில் தகவல் அறிந்து நகரசபை தவிசாளர் நகர சபை உழவு இயந்திர சாரதிகளிடம் கேட்ட போது வேறு ஒரு இடத்தில் இந்த மணலினை கொண்டுபோய் கொட்டுமாறு செயலாளர் கூறினார் எனவும் அதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையில் தங்களது இடத்தில் அடையாளம் காணப்படும் இடங்களில் போட்ட பின்னர் மீதமாக இருப்பதை வேறு இடத்திற்கு கொண்டுபோகுமாறு மீனவ சங்கம் சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்து.

இதையடுத்து தான் சொன்ன இடத்திற்கு மணலினை கொண்டு போய் கொட்டாவிட்டால் மணல் அகற்றும் செயற்பாட்டினை உடனடியாக நிறுத்தி விட்டு அலுவகத்திற்கு திரும்புமாறு செயலாளர் கூறியதனால் தாங்கள் திரும்பிச்சென்றோம் என்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே, எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீறி நகர சபை செயலாளர் தலையிட்டு மணல் அகற்றும் செயற்பாட்டினை நிறுத்தியமை தொடர்பில் மீனவர் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இதேவாளை, பருவ மழை ஆரம்பிக்க உள்ள நிலையில், இந்த மணல்களை விரைவாக அகற்ற மீன்பிடி சங்கங்களுடன் கலந்தாலோசித்து சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கடந்த பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு அறிவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# முரண்பாட்டிலும் இணக்கம்

இலங்கையின் வெளியுறவுக் கொள்கை தொடர்பான கோட்பாட்டு ரீதியான முரண்பாடுகள் தற்போது அரசாங்கத்திற்குள்ளேயே ஒரு தீவிரமான உள்நாட்டுப் போராட்டத்தை ஏற்படுத்தியுள்ளன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்.

ஆளும் தேசிய மக்கள் சக்தி கூட்டமைப்பின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பி. ஆரம்ப காலம் தொட்டு தீவிர இடதுசாரித் தத்துவத்தில் அல்லது மார்க்சியம் அல்லது சோசலிச சார்பு கொள்கையில் இருக்கும் ஒரு கட்டமைப்பாக அடையாளப்படுத்தப்பட்டு வந்தாலும், காலத்துக்கு காலம் சந்தர்ப்பவாதத்தையே அது தன்னுடைய எழுதாத பிரதான கொள்கைக் கோட்பாடாக கொண்டிருந்தது என்பதை அதன் சரித்திரத்தைப் பின்பற்றி நோக்குபவர்கள் சுலபமாக அவதானிக்க முடியும்.

அத்தகைய சந்தர்ப்பவாதப் போக்குடைய தரப்பு, நாட்டின் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தால் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப கோட்பாட்டையும் கொள்கைப்போக்கையும் கூட மாற்றிக் கொள்ளப் பின்நிற்காது என்பது பல தரப்பினராலும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்.

தேசிய மக்கள் சக்தியில் அதிகாரத்தைக் கைப்பற்றிப் பிரயோகிக்கும் பிரமுகர்கள் அவர்களுடைய பரவணிப் பண்பியல்பான சந்தர்ப்பவாதத்திற்கு அமைய, ஆட்சி அதிகாரத்தின் கட்டாயங்களையும் நிலைமைகளையும் புரிந்து கொண்டு, யதார்த்தத்துக்கு ஏற்ப நடந்து கொள்வார்கள் என்பது முழுமையாக எதிர்பார்க்கப்பட்ட விடயம்தான்.

அதே வேளை அதிகாரத்தை கைப்பற்றாத கட்சியின் மூத்த தலைவர்கள், அரசுக் கட்டின் நிர்ப்பந்தங்கள் மற்றும் கட்டாயங்களைப் புரிந்து கொள்ளாமல் தங்களுடைய கட்டமைப்பின் கொள்கை கோட்பாடுகள் என்ற பிடிவாதத்தில் முரண்பட்டு நிற்கின்ற நிலைமை வரும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான்.

அதுதான் இப்போது நடக்கின்றது.

எந்தவொரு நாட்டுடனும் முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளாது இலங்கையின் பொருளாதார நலன்களை கருத்தில் கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் செயல்படுகின்றனர். குறிப்பாக மேற்குலக நாடுகளுடன் இவர்கள் கூடுதலான உறவை வளர்க்க விரும்புகின்றனர். இந்த அணுகுமுறை காரணமாகவே அமெரிக்காவின் பக்கமிருந்து பெரும் ஆதரவுகள் அரசாங்கத்திற்கு கிடைத்தன.

ஆனால் மார்க்சிசம் அல்லது சோசலிச சார்பு கொள்கையில் இருக்கும் ஆளும் கட்சியின் மற்றொரு தரப்பான மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க போன்றோர் சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளின் ஆதரவுகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றனர்.

இந்த முரண்பாட்டு நிலைமை ஆட்சித் தரப்புக்குள் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தினாலும், இவை போன்ற பல்வேறு முரண்பாட்டுக் கோலங்களுக்கும் மத்தியிலும் ஒன்றுபட்டு அரசங்கத்தைச் சேர்ந்து கொண்டிழுப்பதைத் தவிர, வேறு வழியில்லை என்பதை இந்த இரண்டு முரண்பாட்டுத் தரப்புகளும் நன்கு உணர்ந்திருக்கின்றமையால், அரசாங்கம் நித்திய உள்வீட்டு முரண்பாடு, ஆயினும் பூரண ஆயுசு என்ற அடிப்படையில், காலத்தை ஓட்டும் என்று நம்பலாம்.



# மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 10 பேர்ச்சஸ் காணி வழங்க ஏற்பாடு செய்யுங்கள்

### பழனி திகாம்பரம் எம்.பி. வலியுறுத்தல்

(க.கிஷாந்தன்)

"மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 10 பேர்ச்சஸ் காணியை வழங்குவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்." – என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

ஹட்டனில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"மலையக மக்கள் தொடர்பில் ஜனாதிபதியே அதிகம் கதைத்திருந்தார். எனவே, பண்டாரவளையில் அசல் காணி உரித்து வழங்கப்படும் என நம்பி இருந்தேன். ஆனால் அவ்வாறு வழங்கப்படவில்லை. வெறும் கடதாசு ஆவணமே கையளிக்கப்பட்டுள்ளது.

2015 இல் நாம் ஆட்சிக்கு வந்த பிறகு இந்திய வீட்டுத் திட்டம் ஆரம்பமானது. ஒரிஜினல் டீட் (உறுதி) வழங்கப்பட்டது. இது பொய்யென ஜீவன் தொண்டமான் நாடாளுமன்றத்தில் விமர்சித்திருந்தார். ஆனால் அவர்களின் ஆட்சியின்போது அவர் அதனையே வழங்கினார்.

நல்லாட்சி காலத்தில் எல்லோருக்கும் காணி உரிமை வழங்க முடியாமல்போனது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. தற்போதைய ஜனாதிபதி ஆட்சியின்கீழ் எமது மக்களுக்கு காணி உரிமை வழங்க முடியும். 10 பேர்ச்சஸை வழங்குமாறு நான் ஜனாதிபதியிடம் கோருகின்றேன். பணடாரவளையில் கட்டப்படும் வீடுகளுக்கும் விரைவில் அசல் உரித்து வழங்கப்படும்.

நல்லாட்சி காலத்திலேயே மலையகப் பகுதிகளில் அதிகளவான வீடுகள் கட்டப்பட்டன. அதேவேளை, மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கப்பெற்றால் நல்லது. ஆனால் கம்பனிகள் இன்னும் பதிலை வழங்கவில்லை. எனினும், வருட இறுதிக்குள் சம்பள உயர்வு கிடைக்குமென ஜனாதபதி கூறுகின்றார். இதனை நான் நம்பவில்லை.

தோட்டங்களை மக்களுக்குப் பிரித்து கொடுத்து, அவர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும்.

இந்திய வீட்டுத் திட்டத்தை விரைவில் நிறைவு செய்யுமாறு கோருகின்றேன். எமது மக்களுக்கு 10 பேர்ச்சஸ் காணியை வழங்கினால், அவர்களால் வீடுகளை நிர்மாணித்துக்கொள்ள முடியும். அதுவே சிறந்த திட்டம்.

நாம் களவெடுக்கவில்லை. மக்களுக்கும் இது தெரியும். எனவே, அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும். சில அமைச்சர்கள் பொய்யுரைப்பதுதான் பிரச்சினை." – என்றார் திகாம்பரம்.

# கஞ்சா, ஹெரோயின் மற்றும் ஐஸுடன் 2 இளைஞர்கள் வட்டவளையில் கைது

(க.கிஷாந்தன்)

கொழும்பு, மருதானையில் இருந்து ஹட்டன் வழியாக வெலிமடை வரை சென்ற ஓட்டோவில் கஞ்சா, ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டனர் எனச் சந்தேகிக்கப்படும் இரு இளைஞர்களை வட்டவளை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

25 மற்றும் 27 வயதுடைய வெலிமடை பகுதியைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மருதானை பகுதியில் வாடகை ஓட்டோ ஓட்டுபவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

ஈசி கேஸ் முறையில் பணத்தைப் பெற்றுக்கொண்டு, வீதிகளில் அடையாளம் காணப்பட்ட சில பகுதிகளில் போதைப்பொருளை வைத்துவிட்டுச் செல்கின்றனர் என வட்டவளை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்தது.



மருதானையில் இருந்து வெலிமடை நோக்கி இவர்கள் ஓட்டோவில் நேற்றுப் பயணித்துக் கொண்டிருந்த போது, வட்டவளை பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள சோதனைச் சாவடியில் அவர்களது ஓட்டோ நிறுத்தப்பட்டு சோதனை செய்யப்பட்டது.

இதன்போது கஞ்சா, ஹெரோயின் மற்றும் ஐஸ் ஆகிய போதைப்பொருள்கள் மீட்கப்பட்டன.

இவர்கள் வசமிருந்து 4 தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவர்களை ஹட்டன் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



# ‘உதிரம் கொடுப்போம்; உயிர் காப்போம்’ ஆரையம்பதியில் குருதிக்கொடை நிகழ்வு

**(மட்டக்களப்பு நிருபர்)**

“உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்” எனும் தொனிப்பொருளின் கீழ் இரத்ததான நிகழ்வொன்று மட்டக் களப்பு மாவட்டம் மண்முனைப் பற்று ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கியின் குருதித் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.தெட்சணகௌரி தினேஷின் வழிகாட்டலில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது பிரதேச செயலக உத்தி யோகஸ்தர்கள் மற்றும் மண்முனைப் பிரதேச பொது அமைப்புக்கள்,விளை யாட்டுக் கழகங்கள் எனப் பல அமைப் புகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர். இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி இரத்த சேகரிப்பைப் பெற்றுக் கொண்டது.













# தமது காணிகளை மீட்டுத் தருமாறு கோரி மல்வத்தை சந்தியில் மக்கள் ஆர்ப்பாட்டம்

## ஜனாதிபதிக்கு பாதிக்கப்பட்ட மக்களின் கடிதங்கள் அனுப்பிவைப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

தமது பூர்வீக வயல் காணிகளை மீட்டுத் தருமாறு கோரி தொட்டாச்சுருங்கி வட்டை மற்றும் திருவள்ளுவர்புரம் பொது மக்களால் கவனவீர்ப்புப் போராட்டமும், ஜனாதிபதிக்கு மகஜர்கள் அனுப்பும் செயற்பாடும் நேற்று திங்கட்கிழமை காலை சம்மாந்துறை மல்வத்தைச் சந்தியில் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்திலும் கவனவீர்ப்பு போராட்டத்திலும் கலந்து கொண்ட மக்கள் பல வித சுலோகங்கள் கொண்ட பதாகைகளை ஏந்திக் குரல் எழுப்பினர்.

தமக்கு நேர்ந்த கதியை விளக்கி ஜனாதிபதிக்கு முறைப்பாடு கடிதங்களை அனுப்பி வைத்தனர்.

அவர்கள் கூறுகையில் –

1983 ஆம் ஆண்டு நாட்டில் இடம் பெற்ற அசாதாரண சூழ்நிலைகளின் நிமித்தமாக எமது வாழ்விடங்கள், விவசாய நிலங்களைக் கைவிட்டு இடம் பெயர்ந்து சென்று பல வருடங்களின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட சமூகமான நிலையைத் தொடர்ந்து வருகை தந்து பார்த்தோம். எம்மிடம் போதுமான ஆவணங்களும் ஆதாரங்களும் இருக்கத்தக்கதாக சுமார் 57 பேரின் விவசாயக் காணிகளை அபகரித்திருந்தனர்.

அதேபோன்று மல்வத்தை திருவள்ளுவர்புரம் மக்களில் 1990 களில் ஏற்பட்ட அசாதாரண நிலைகளில் இடம் பெயர்ந்து சென்ற 11 குடும்பங்களின் குடியிருப்புக் காணிகளைத் தனிநபர் ஒருவருமாக அடாத்தாக அபகரித்தார்.

அத்துடன் ஆவணங்களும் ஆதாரங்களும் எதுவும் இன்றி விவசாயம் செய்து வருவதை அவதானித்தோம்.

இது தொடர்பாக சம்மாந்துறை பிரதேச செயலகம், அம்பாறை மாவட்ட செயலகம் மற்றும் கிழக்கு ஆளுநர் அலுவலகம் போன்றவற்றில் முறைபாடுகள் செய்தோம் .

பல அரசியல் தலைவர்களை சந்தித்து முறையிட்டோம்.

எதுவித தீர்வும் கிட்டவில்லை. விரக்தியுடன் உள்ளோம். பணபலம், அரசியல் பலத்தை வைத்து தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வந்தோம் .

அதனால் தான் இன்று நாங்கள் இணைந்து இன்றைய தினம் ஜனாதிபதியினுடைய கவனத்தை ஈர்க்கும் வகையிலே ஒரு கவன ஈர்ப்பை மேற்கொண்டமையோடு ஜனாதிபதியினுடைய கவனத்திற்காக எங்களுடைய முறைப்பாடுகளைக் கடிதங்களாக அனுப்பி வைக்கின்ற போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்திருந்தோம். – என்றனர்.












# நீதி வெல்லுமென விஜய் திடீர் பதிவு

கரூர் வழக்கில் உச்ச நீதிமன்றம் சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டுள்ள நிலையில், அதைப் பற்றி வெளிப்படையாக எதுவும் குறிப்பிடாமல், 'நீதி வெல்லும்' என்று தமிழக வெற்றிக் கழகம் தலைவர் விஜய் எக்ஸ் தளத்தில் கருத்து பகிர்ந்துள்ளார்.

கரூர் விவகாரம் தொடர்பாக தமிழக அரசு, அருணா ஜெகதீசன் தலைமையிலான ஒரு நபர் ஆணையம் அமைக்கப்பட்டது. சென்னை உயர் நீதிமன்றத்தில் அஸ்ரா கர்க் தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



இந்த நிலையில், சென்னை உயர் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து, த.வெ.க. சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கை விசரித்த உச்ச நீதிமன்ற அமர்வு வாதங்களை பதிவு செய்து கொண்டது.

இந்த நிலையில், த.வெ.க. தொடர்ந்த வழக்கில் நேற்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதன்படி, ஓய்வு பெற்ற நீதிபதி மேற்பார்வையில் சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுக்கு பல்வேறு கட்சித் தலைவர்கள் தங்களது கருத்துகளை பதிவு செய்து வருகின்றனர்.

இந்தச் சூழலில், தமிழக வெற்றிக் கழகம் தலைவர் விஜய் தனது எக்ஸ் பக்கத்தில் 'நீதி வெல்லும்' என்று பதிவிட்டுள்ளார்.

# கரூர் வழக்கினை சி.பி.ஐக்கு மாற்றியமை தமிழக பொலிஸை அவமதிக்கும் செயல்

## சீமான் கருத்து

கரூர் வழக்கு விசாரணை, சி.பி.ஐக்கு மாற்றம் என்பது தமிழக பொலிஸை அவமதிக்கும் செயல் என்று நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கருத்து தெரிவித்துள்ளார்.

கரூர் நெரிசல் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றம் அஸ்ரா கர்க் தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழு உருவாக்கப்பட்டது. இந்த நிலையில், சிறப்பு புலனாய்வுக் குழு உத்தரவை எதிர்த்து த.வெ.க. சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கில் வாதங்களை கேட்ட நீதிபதிகள், நேற்று அளித்த தீர்ப்பில் சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டனர்.

இதுதொடர்பில் செய்தியாளர்களிடம் சீமான் கருத்து தெரிவிக்கையில், "சி.பி.ஐ விசாரணை என்பது ஏற்புடையதல்ல, அது ஒரு மாநில உரிமைக்கு எதிரானது. தமிழ்நாடு பொலிஸ் விசாரணையில் என்ன குறையை கண்டுவிட்டீர்கள்?



நீதிமன்றம், தேர்தல் ஆணையம், அமலாக்கத் துறை, வருமான வரித் துறை, மத்திய புலனாய்வு துறை... இவை தன்னாட்சி கொண்ட அமைப்புகள் அல்ல. அவை அனைத்தும் ஆட்சியர்களின் விரல்களை போல், அவர்கள் சொல்வதை போல் செயல்படும். சி.பி.ஐ. விசாரணை மடைமாற்ற மட்டுமே உதவும். இன்று முதல் விசாரணையை தொடங்கி, இரண்டு மாதங்களுக்குள் கரூர் வழக்கு குறித்து சி.பி.ஐ. முழுமையான விசாரணை அறிக்கையை தாக்கல் செய்துவிடுமா?

கரூர் விவகாரத்தில் விசாரணை தொடங்கவே இல்லை, அதற்குள் சி.பி.ஐக்கு மாற்றப்பட்டுள்ளது. த.வெ.க. கரூர் வழக்கில் அஸ்ராகர்க் தலைமையிலான விசாரணை வேண்டாம் என்று நீதிமன்றத்தில் கூறுகிறது. சிறுநீரக முறைகேடு வழக்கில் நீதிமன்றம் அமைத்த விசாரணை குழுவை தமிழக அரசு வேண்டாம் என்று கூறுகிறது. இதில் இருந்து மாநிலத்தில் எப்படிப்பட்ட ஆட்சி நடைபெறுகிறது என்பது தெரிகிறது." என்று தெரிவித்தார்.

# பா.ஜ.கவுக்கு தமிழகத்தில் எந்த வாக்குகளும் இல்லை

## செல்வப்பெருந்தகை கருத்து

"நாடாளுமன்ற தேர்தலின் போது, கூட்டணியில் எல்லா சமூக தலைவர்களை வைத்துக் கொண்டு அவர்களின் வாக்குகளை பெற்று, அதனை பா.ஜ.க. வாக்கு எனக் கூறுவது அபத்தம். தமிழகத்தில் பா.ஜ.கவுக்கு வாக்குகள் கிடையாது."

- இவ்வாறு தமிழ்நாடு காங்கிரஸ் கொமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கொமிட்டி சார்பில், நேற்று காலை மீஞ்சூரில் வாக்குத் திருட்டுக்கு எதிராக கையெழுத்து இயக்க பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் காங்கிரஸின் மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை, திருவள்ளூர் வடக்கு மாவட்ட தலைவரும், பொன்னேரி எம்.எல்.ஏவுமான துரை.சந்திரசேகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். வாக்கு திருட்டு தொடர்பாக, பா.ஜ.க. மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்தை கண்டித்து உரையாற்றினர்.

கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் செல்வப்பெருந்தகை கருத்து தெரிவிக்கையில்,

"தமிழகத்தில் 22 ஆயிரம் கிராம கொமிட்டிகள் அமைத்திருக்கிறோம். வேர்களைத் தேடி காங்கிரஸ் செல்கிறது. வாக்கு உரிமைக்காக தொடர்ந்து களத்தில் போராடுகிறோம். போகப் போகத் தெரியும் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சி. வருகிற தமிழக சட்டப்பேரவை தேர்தலில் கூடுதல் தொகுதிகளில் போட்டி, ஆட்சியில் பங்கு ஆகியவை குறித்து அகில



இந்திய காங்கிரஸ் கொமிட்டி தலைமை முடிவெடுக்கும்.

பொன்னேரி (தனி) சட்டப்பேரவை தொகுதியை மீண்டும் கூட்டணியில் கேட்டுப் பெறுவோம். நிரந்தர சட்டப்பேரவை உறுப்பினர் துரை சந்திரசேகர். நாடாளுமன்ற தேர்தலில் கூட்டணியில் எல்லா சமூக தலைவர்களை வைத்து கொண்டு அவர்களின் வாக்குகளை பெற்று, அதனை பா.ஜ.க. வாக்கு என கூறுவது அபத்தம். தமிழகத்தில் பா.ஜ.கவுக்கு வாக்குகள் கிடையாது." என்று தெரிவித்தார்.





# 13 பணயக்கைதிகள் கொண்ட குழுவை ஒப்படைத்த ஹமாஸ்

ஹமாஸ் 13 பணயக்கைதிகள் கொண்ட இரண்டாவது குழுவை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்துள்ளமையை இஸ்ரேலிய இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது.

முன்னதாக 7 பணயக்கைதிகள் ஒப்படைக்கப்பட்டதையும் இஸ்ரேல் உறுதி செய்தது.

ஹமாஸ் அமைப்பினர் 20 பணயக் கைதிகளையும், இறந்த 28 பேரின் உடலங்களையும் விடுவிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில், 1,718 பாலஸ்தீன கைதிகளை விடுவிக்க இஸ்ரேலிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

# பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு அறிவிப்பு

2025 ஆம் ஆண்டு நோபல் பரிசுக்கான அறிவிப்புகள் வெளியாகி கொண்டு இருக்கின்றன.

அந்தவகையில் 2025 ஆம் ஆண்டின் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு ஜோயல் மோகிர், பிலிப் அகியோன் மற்றும் பீட்டர் ஹோவிட் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுமை சார்ந்த பொருளாதார வளர்ச்சியை தெளிவுபடுத்தியமைக்காக மூவருக்கும் நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.








# தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 42 பேர் உயிரிழந்தனர்

தென்னாபிரிக்காவில் பஸ் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில், 42 பேர் உயிரிழந்தனர்.

தென்னாபிரிக்காவின், பிரிட்டோரியா தலைநகரிலிருந்து 400 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள லூயிஸ் ட்ரைகார்ட் நகர் அருகே நெடுஞ்சாலையில் பயணித்த பஸ் ஒன்று மலைப் பகுதிகளுக்கு அருகே சென்றபோது, திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு மீட்புப் படையினர் நீண்ட நேரம் போராடி மீட்புப் பணிகளை மேற்கொண்டனர்.

இந்த விபத்தில் 42 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் பலத்த காயம் அடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும், பலி எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துக்கான காரணம் தொடர்பில் அந்த நாட்டு பொலிஸார் விசாரணைகளைமுன்னெடுத்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள்- 14.10.2025




இன்று அதிர்ஷ்டம் காணப்படும் நாள். திருப்திகரமான பலன்கள் கிடைக்கும் சாதகமான நாள். உங்கள் பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

பணியில் உங்கள் நேர்மை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். சரியான நேரத்தில் பணிகளை முடிப்பது சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்கள் பணியில் உங்கள் திறமை வெளிப்படும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நம்பிக்கை ஏற்படும்.நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். இதனால் உங்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும்.




இன்று எதிர்பாராத வரவுகளும் வெற்றியும் கிடைக்கும் நாள். புத்திசா லித்தனத்தை பயன் படுத்துவதன் மூலம் அதிகம் சாதிக்கலாம்.

பணியில் உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். குறித்த நேரத்துக்கு முன்பே பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

நீங்கள் உங்கள் துணையிடம் சந்தோஷமான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலை சீராக இருக்கும். காப்பீடு அல்லது பூர்வீக சொத்து வகையில் பண வரவு கண்டு மகிழ்வீர்கள்.

உங்களின் ஆற்றல் மற்றும் திடமான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று கவனமாகக் கையாள வேண்டிய கடினமான சூழ்நிலைகள் காணப்படும். இசை கேட்பது மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது சில போராட்டங்களை சந்திப்பீர்கள். உங்கள் சக பணியாளர்கள் மூலம் சில பிரச்சினைகளை நீங்கள் சந்திப்பீர்கள். இதனால் அவர்களுடன் நல்லுறவு காணப்படாது.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப் படுவீர்கள்.இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை அவ்வளவு திருப்திகரமாக காணப்படாது. தேவையற்ற செலவுகள் ஏற்படும்.




இன்று திருப்திகரமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை திட்டமிட்டு திறமையாக நடத்த வேண்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

பணிகள் கடோயாக யாருக்கும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாத நிலை இருக்கும். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ளவும்.

மன நிலை மாற்றத்தால் பாதிப்பு ஏற்படும். இதனால் உங்கள் துணையுடன் நல்லுறவு காண இயலாது. உறவில் நல்லிணக்கம் காண அமைதியான போக்கை மேற்கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பு ஏற்படும். பணத்தை கையாளும்போது கவனம் தேவை.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் சாதகமான நாள். கடின உழைப்பு மற்றும் இடைவிடாத முயற்சி மூலம் லாபகரமான பலன்கள் கிடைக்கும். இது உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும்.

நீங்கள் இன்று கடினமான பணி களையும் எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் செயல் திறன் மேலதிகா ரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்து ணர்வு ஏற்படும். இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று பணம் சேர்ப்பதற்கானஅதிர்ஷ்ட நிலை உள்ளது. இதனால் உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள்.




இன்று முன்னேற்றகரமான பலன் கள் கிடைக்கும். புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி உங்கள் முயற்சிகளில் வெற்றி காணலாம். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சியான் நாள்.

பணி தொடர்பான பயணம் காணப் படுகின்றது. குறித்தநேரத்தில் பணி களை முடிப்பதன் மூலம் உங்கள் திறமை வெளிப்படும்.

உங்களின் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். பயணம் காணப்படுகின்றது. இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு வரும் பண வரவு வரப்பிரசாதமாக அமையும். எதிர்கால பாதுகாப்பிற்காக உபரிப் பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களின் நம்பிக்கையான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் செயல்களில் கவன மாக இருக்க வேண்டும். சாதகமான பலன்கள் கிடைக்க கடினமான சூழ் நிலைகளை கவனமாக கையாள வேண்டும். இசை கேட்டல் மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள வேண்டும். உங்கள் பணிகளை மீண்டும் சரிபார்த்து செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

தகவல் தொடர்பில் காணப்படும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் பாதிப்பு ஏற்படும். உறவில் நல்லிணக்கம் காண இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. நீங்கள் எளிதில் உணர்ச்சிவசப்படுவீர்கள். முடிவுகளை விரைந்து எடுப்பீர்கள். இதனால் பிரச்சினை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். உங்கள உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் சிறந்த பலனைக் காணலாம்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு சற்று கவலை ஏற்படுத்தும். சக பணியாளர்களிடமிருந்து சில தொல்லைகளை எதிர் கொள்ள நேரும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு அனுசரணையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள்- 14.10.2025




உங்கள் வளர்ச்சிக்கு உதவும் முயற்சிகளை எடுக்க இன்றைய நாள் சாதகமாக உள்ளது. உங்கள் இலக்குகள் நிறைவேறும். திருப்தியும் நல்ல உணர்வும் உங்களிடம் இன்று காணப்படும்.

புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு திருப்தி அளிக்கும். சாதித்தது போன்ற உணர்வு உங்களிடம் காணப்படும். எனவே நீங்கள் சிறப்பாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதற்கு உகந்த நாள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துன்றவும் மகிழ்ச்சி யும் வளரும்.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் பண வரவு ஏற்பட்டு பணம் சேர்க்க இயலும்.




இன்று சீரான பலன்கள் கிடைக் காது. சவால்களை சந்திக்க வேண்டிய சூழ் நிலை காணப்படும். நீங்கள் பொறுமையுடனும் திறமையுடனும் இதனைக் கையாள வேண்டும். தான தருமங்கள் போன்ற தொண்டு நடவடிக் கைகளில் ஈடுபடுவதன் மூலம் மன அமைதி பெறலாம்.

சக பணியாளர்களுடன் சில அசௌகரியங்களை உணர்வீர்கள். இம்மாதிரியான அற்ப விஷயங்களை தவிர்த்து உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டியது இன்று அவசியம்.

இன்று உங்கள் துணையுடன் பேசாமல் அமைதியாக இருப்பது நல்லது.இன்று கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.




இன்று குழப்பங்களும் வருத்த மான மன நிலையும் காணப்படும். இன்றைய நாளை சமாளிக்க நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணியிடத்தில் பணிகள் இறுக்க மாக காணப்படுவதால் நீங்கள் மும்ம ரமாக பணியில் ஈடுபட்டிருப்பீர்கள். சக பணியாளர்களின் எதிர்ப்பை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும். சிறப்பாக பணியாற்ற பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே சூடான விவாதங்கள் ஏற்படும். இதனை தவிர்க்க நீங்கள் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும்.

நிதி வளர்ச்சியில் தடைகள் காணப்படும்.




இன்று முன்னேற்றகரமான பலன் கள் கிடைக்காது. பொறுமையுடன் இருந்தால் பல நன்மைகளைக் காண லாம். வெறுமை இருப்பது போன்ற உணர்வு காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் இந்த சூழ்நிலையை சமாளித்து அமைதி பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும். இன்று நீங்கள் திட்டமிட்டு பணியாற்றுவது மிகவும் அவசியம் .

உங்கள் துணையுடன் சகஜமாக இருக்க வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் தக்க வைக்க முடியும்.நிதி விஷயங்களில் விரும்பும் பலன்கள் கிடைக்காது. உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

# குருக்கள்மடம் தென்னம் தோப்பிலிருந்து வயோதிபர் ஒருவர் நேற்று சடலமாக மீட்பு









**(மட்டக்களப்பு நிருபர்)**

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடம் தென்னம் தோப்பிலிருந்து ஆண் ஒருவ ரின் சடலம் நேற்றுத் திங்கட்கிழமை மீட் கப்பட்டதாக களுவாஞ்சிகுடிப் பொலி ஸார் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:–

குருக்கள்மடம் தென்னம் தோப்பில் ஆண் ஒருவரின் கடலம் கிடப்பதாக அப்பகுதி பொதுமக்கள் களுவாஞ்சிகுடி பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கு கமைய அங்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

இந்நிலையில் களுவாஞ்சிகுடி நீதிபதி ரி.பிரதீபனின் உத்தரவுக்கமைய அங்கு சென்ற களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி சிதம்பதப் பிள்ளை ஜீவரெத்தினம் சடலத்தை பார் வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனை களுக்காக சடலத்தை களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

சடலமாக மீகப்பட்டவர் குருக்கள்மடம் கிராமத்தைச் சேர்ந்த 81 வயதுடைய கதிர்காமத்தம்பி சேமசுந்தரம் என அடையாம் காணப்பட்டுள்ளார். இச்சம்ப வம் தொடர்பில் களுவாஞ்சிகுடி பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.